விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 230 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 21 சனிக்கிழமை (06.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




ராஜபக்ஷக்களின் அரசியல் எதிர்காலத்தை

## போராட்டம் மூலம் தீர்மானிக்க முடியாது

நாமல் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு) போராட்டத்தால் ராஜபக்ஷக்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாது எனவும் அவ்வாறான திட்டத்துக்கு தான் இடமளிக்கப் போவதில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

எதிர்வரும் வாரமும்

## மூன்று நாட்களே பாடசாலை இயங்கும்

(கொழும்பு)

எதிர்வரும் வாரமும் மூன்று நாட்களுக்கு மட்டுமே பாடசாலை நடைபெறும்என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அதனடிப்படையில், திங் 11

48 மணிநேரத்துக்கு


## QR பதிவுகளை மேற்கொள்ள முடியாது

(கொழும்பு)

புதிய பயனர்களுக்கான தேசிய எரிபொருள் அமைப்புக்கான QR பதிவுகளை 11

எதிர்வரும் 6 மாதங்கள்

# நாட்டுக்கு மிகவும் கடினமான காலம்



ஜனாதிபதி ரணில் அபாய மணி

(கொழும்பு) நாட்டுக்கு எதிர்வரும் 6 மாதங்கள் ஒருபோதும் அனுபவித்திருக்காத மிகவும் கடினமான காலப்பகுதியாக இருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இந்தக் காலப்பகுதியை கடந்தே ஆக வேண்டும் இதனைத் தடுக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

இன்றும் நாளையும்

## மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

நாடு முழுவதும் இன்று 6 ஆம் திகதி சனிக்கிழமையும் நாளை 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மின் வெட்டு அமுலப்படுத் 11

முடிவுக்கு வந்தது

## தனியார் பஸ்களின் பணிப் புறக்கணிப்பு

(கொழும்பு)

QR குறியீட்டு முறைமையின் ஊடாக ஒதுக்கப்பட்ட எரிபொருள் 11

## ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து பணியாற்றத் தயார்

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் இளைஞர்களுடன் இணைந்து வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட தான் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாம் இப்போது பொருளாதாரப் போராட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்தப் பொருளாதாரப்போராட்டத்தின் வெற்றிக்கு 11

யாழில் பொதுமக்களுக்கு

## இன்று எரிபொருள் வழங்கப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இன்று பொதுமக்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படமாட்டாது என யாழ்.மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 23 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 6 எரிபொருள் நிரப்பு 11

## 19ஆவது திருத்த சட்டத்தை அப்படியே அமுலாக்குங்கள்

ரணிலிடம் சஜித் கோரிக்கை

(கொழும்பு)

19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள சரத்துக்களை அப்படியே அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ரணிலிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நேரில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டணிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித் 02

## நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு சர்வகட்சி நிர்வாகமே வேண்டும்

ஜனாதிப்தி ரணிலிடம் எதிர்க்கட்சி வலியுறுத்து



(கொழும்பு)

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை [illegible] சர்வ 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உலகப் போராட்டங்கள் அமைதியாக நடப்பதில்லை;

# தியானம் செய்வதன் மூலம் வஞ்சகர்களை விரட்ட முடியாது

### பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

**உலகப் போராட்டங்கள் அமைதியானவை அல்ல. தியானம் செய்வதன் மூலமும் தவம் செய்வதன் மூலமும் ஒரு நாட்டில் வஞ்சகர்களை விரட்ட முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

அரசியலமைப்பின் பிரகாரம் போராடுவது சாத்தியமில்லை என தெரிவித்த பொன்சேகா, எமது இலக்குகளை அடைய வெளியில் சென்று போராட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், போராட்டத்தின் போது உயிர்த் தியாகம் செய்ய வேண்டும் என்றால் அதற்கும் தயாராக வேண்டும். அப்போது உயிர்த் தியாகம் செய்தவர்களை மக்கள் மாவீரர்களாக கொண்டாடுவார்கள்.

போராட்டக்காரர்களை சுட்டுக் கொன்றால் 20 முதல் 25 பேர் வரை இறக்க நேரிடும். இதுபோன்ற தாக்குதல்களால் போராட்டத்தை நிறுத்த முடியாது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சர்வதேச சமூகம் தலையிட்டு வான் தாக்குதல்களை நடத்தலாமென்றும் இராணுவ தலைமையகத்தைக்கூட அழிக்க முடியும் எனவும் மத்திய கிழக்கு நாடுகளில் இதற்கான உதாரணங்கள் உள்ளன.

மக்கள் மீது தாக்குதல் நடத்தினால் இது போன்ற சம்பவங்கள் நடக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இன்று அரச பயங்கரவாதம் செயற்படுகிறது. சில இளைஞர்கள் சிறையில் உள்ளனர். சிலர் தலைமறைவாக உள்ளனர்.

மக்கள் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பான கட்டளைகளை பின்பற்ற வேண்டாம் என நான் பலமுறை இராணுவத்திடம் வலியுறுத்தினேன். இராணுவம் அரசியலமைப்பை பாதுகாக்க வேண்டும்.

போராட்டத்திற்குள் பல்வேறு குழுக்கள் இருக்கின்றன. பணம் பெறும் குழுக்களும் உள்ளன.

அரசியல்வாதிகளுடன் இரவோடு இரவாக போராட்ட களத்தில் நிற்கும் குழுக்களும் இருக்கின்றன. போராட்டம் ஆயுதப் போராட்டமாக இல்லாமல் இருந்தால் நல்லது.

ஆட்சியாளர்கள் ஊழல் செய்தால் தூக்கி எறிய வேண்டும் என்றும் போராட்டத்துக்காக யாருடனும் பேசத் தயார்.

அரசியல் நிகழ்ச்சி நிரலின்றி ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தின் ஊடாக எதிர்காலத்தில் தலைவர்கள் உருவாகுவார்கள்.

போராட்டத்திற்காக 1500 வழக்கறிஞர்களை திரட்டி வருவதாகவும் சிறப்பு மருத்துவர்கள் உள்ளிட்ட குழுக்களை தொடர்பு கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொன்சேகா கூறினார். (ம)

## நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களின் பின்னணி என்ன?

### அநுர பிரியதர்சன யாப்பா கேள்வி

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் தொடர் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களின் பின்புலம் தொடர்பில் கண்டறியப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் கடந்த இரு மாதங்களுக்குள் 21 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சிலர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

உரிய விசாரணையை முன்னெடுத்து, உண்மையை கண்டறிய வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)

## கோவிட் தொற்றினால் மேலும் 4 பேர் மரணம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்று காரணமாக நாட்டில் மேலும் நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், 30 தொடக்கம் 59 வயதுக்குட்பட்டவர்களில் ஆண் ஒருவரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஒரு ஆண், இரு பெண்கள் உள்ளிட்ட மூவருமாக நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

### நாட்டுக்கு...

பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பான ஆய்வு அறிக்கையை வெளியிடும் நிகழ்வு நேற்று கொழும்பில் நடைபெற்ற போது, அந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இந்த விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலைமையில் சர்வதேச நாணய நிதியத்துடன் தேவையான ஒப்பந்தங்களைச் செய்து இணக்கப்பாடுகளை எட்டிப் பயணிப்பதைத் தவிர மாற்று வழிகள் இருப்பதாக நான் கருதவில்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காகப் பல்வேறு வேலைத் திட்டங்களை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். எனினும் அடுத்துவரும் 6 மாதங்கள் கடினமானவை. அதனைக் கடந்தே ஆகவேண்டியுள்ளது. கடக்க முடியாது என்று திரும்பி வர முடியாத நிலைமையே காணப்படுகின்றது என்றார். (ம)

### நெருக்கடி...

கட்சி அரசாங்கமல்ல. சர்வகட்சி நிர்வாகமொன்றே ஸ்தாபிக்கப்பட வேண்டும். குறித்த சர்வகட்சி நிர்வாகத்தின் கீழ் பாராளுமன்ற கண்காணிப்பு குழுக்களை நியமித்து அதன் ஊடாக நிர்வாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி ரணிலுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று ஐக்கிய மக்கள் கூட்டணி கலந்துரையாடலில் ஈடுபட்டது. இதன்போதே இவ்வாறு கோரிக்கைவிடப்பட்டது.

சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்பதற்கு தாம் தயாராக இல்லை என்றும், சர்வகட்சி நிர்வாகத்தில் நியமிக்கப்படவுள்ள பாராளுமன்ற கண்காணிப்பு குழுக்களுக்கு அதிகாரம் மிக்க தலைமைத்துவத்தினை வகிக்கத் தயார் என்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

### 19 ஆவது...

துள்ளார்.

ஜனாதிபதியிடம் சஜித் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 19வது திருத்தத்தை அவ்வாறே [illegible] [illegible] புகின்றோம். அன்று நாட்டின் பிரதமராக நீங்கள் 19வது திருத்தத்தை கொண்டு வர தலைமைத்துவம் வழங்கினீர்கள். அது மிகவும் நல்ல ஒரு நகர்வு ஆகும். எனவே, இதனை மேலும் முன்னெடுத்துச் செல்லுமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் 19ஆவது திருத்தத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு சபைகளின் எண்ணிக்கை 20ஆவது திருத்தத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 19ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்தபடியே அதனைக் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியமானது என்பதை நினைவுகூர விரும்புகின்றேன்.

இன்று நாட்டில் நிலவும் மிகப் பெரிய பிரச்சினை, மக்கள் மீது பெரும் பொருளாதாரச் சுமை சுமத்தப்பட்டுள்ளமை ஆகும். இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், தற்போதுள்ள அவசரகால சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

பாராளுமன்றத்தில் துறைசார் குழுக்களை அமைத்தால் மட்டும் போதாது. இது தவிர மேலும் பல குழுக்களை அமைப்பதில் கவனம் செலுத்த பரிந்துரைக்கின்றோம் என்றார்.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு நேர்மறை எண்ணங்களுடன் இன்று (நேற்று) இந்த கலந்துரையாடலுக்கு வந்துள்ளது. இந்த நேரத்தில் ஒரு நாடாக நாம் இந்த கலந்துரையாடலில் கலந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் தற்போது அசாதாரணமான அரசியல் சூழ்நிலை உள்ளதென்றே கூற வேண்டும். அதனை முழுமையாகப் புரிந்து கொண்டு இந்த கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்ல நான் தயாராக உள்ளேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமுத்திர பிராந்தியத்தை வல்லாதிக்க அதிகாரப் போட்டிக்கான களமாக்க வேண்டாம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**இந்து சமுத்திரப் பிராந்தியம் எப்பொழுதும் அமைதிப் பூங்காவாகத் திகழ வேண்டும் என்பதில் இந்தியா ஆதிக அக்கறை கொண்டுள்ளது. எனவே அந்த அமைதி முயற்சியைக் குலைக்கும் விதத்தில் இலங்கையின் வெளியுறவுக் கொள்ளை அமைந்து விடக்கூடாது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எச்ச ரிக்கை விடுத்துள்ளார். சீன உளவுக் கப்பலின் வருகை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.**

இது குறித்துஅவர் விடுத்துள்ள ஊடகஅறிக்கையில் சீனாவின் உளவுக் கப்பல் ஒன்று இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு எதிர்வரும் 11 ஆம் திகதி வர விருப்பதாகவும் ஏறத்தாழ ஒரு வாரம் இங்கு தங்கியிருந்து ஆய்வுகள் செய்ய இருப்பதாகவும் ஊடகச் செய்திகள் தெரி விக்கின்றன.

இந்த உளவுக் கப்பலானது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைக் கண்காணிப்பதுடன், செய்மதிகள் அனுப்புவது போன்றவற்றைக் கண்காணிக்கும் திறன் கொண்டதுமாகும். மேலும் இந்தக் கப்பலைச் சுற்றி 750 சதுர கி.மீ பரப்பளவிற்கு சகலவற்றையும் கண்காணிக்கும் தொழில் நுட்பத் திறன்களையும் கொண்டது.

இலங்கை என்பது இந்தியாவிற்கு மிக அண்மித்த நாடாக இருக்கின்றது. குறிப்பாக இந்தியாவின் பாதுகாப்பு எல்லைப் பரப்பிற்குள் இலங்கையும் உள்ளடங்குகின்றது. இந்தியாவின் தென் மாநிலங்களில் அணுசக்தி நிறுவனங்களும், செய்மதி ஏவுதளங்களும் இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களும் உள்ளன. இத்தகைய ஒரு சூழ்நிலையில், சீன உளவுக் கப்பலின் வருகை என்பது இந்தியாவுக்கு அச்சுறுத்தல் என்பதற்கு அப்பால் இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இது ஒரு புறமிருக்க. இந்து சமுத்திரப் பிராந்தியமானது வல்லரசுகளின் போட்டியிலிருந்து விடுபட்டு.ஓர் அமைதிப் பிராந்தியமாக இருக்க வேண்டும் என்பதில் நேருவும் சாஸ்திரியும் இந்திரா காந்தியும் சிரத்தையுடன் இருந்தார்கள்.

தற்பொழுது, இந்து சமுத்திரப் பிராந்தியமானது அவ்வாறான அமைதிப் பிரதேசம் என்ற நிலையிலிருந்து அமெரிக்க சீன வல்லரசுகளின் வல்லாதிக்கப் போட்டியின் களமாக மாறுகின்றதா என்ற அச்சம் எழுகின்றது.

எனவே இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் காத்திரமான மாற்றங்கள் தேவை என்பதையும் இந்து சமுத்திரப் பிராந்தியம் அமைதிப் பிராந்தியமாகத் திகழ வேண்டும் என்பதற்கு முதன்மை ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்பதிலும் இலங்கை கவனத்துடன் செயற்பட வேண்டுமெனா தெரிவித்தார். (4)

# 80 அடி பள்ளத்தில் பாய்ந்து பேருந்து விபத்து!

## ஒருவர் உயிரிழப்பு 13 பேர் படுகாயம்

(கொழும்பு)

பூண்டுலோயாவிலிருந்து கம்பளை நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்று பூண்டுலோயா கொத்மலை பிரதான வீதியில் மல்லாவ பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

பூண்டுலோயா பகுதியிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு கம்பளை பகுதிக்கு சென்ற குறித்த பேருந்தானது வீதியை விட்டு விலகி சுமார் 80 அடி பள்ளத்தில் பாய்ந்தே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

குறித்த வீதியானது வழுக்கல் தன்மையுடன் காணப்பட்டது காரணமாக பேருந்தின் சாரதிக்கு பேருந்தை கட்டுப்படுத்த முடியாமல் போனமையே விபத்துக்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



இவ்விபத்து தொடர்பாக பூண்டுலோயா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

# யாழ்.இளைஞர்கள் இருவர் கதிர்காமம் நோக்கி ஈருருளிப் பயணம்



(அராலி)

யாழ்ப்பாணம்-தொல்புரம்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் நேற்று கதிர்காம்த்தை நோக்கி ஈருருளிப் பயணத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொல்புரத்தைச் சேர்ந்த குகநாதன் நிதுசன் . பாஸ்கரன் சுமித்தன் ஆகிய இரண்டு இளைஞர்களுமே இவ்வாறு ஈருருளிப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். குறித்த பயணமானது நேற்று யாழ்ப்பாணம் - பண்ணை முனியப்பர் கோவிலடியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பயணம் முல்லைத்தீவைச் சென்றடைந்து. அங்கிருந்து திருகோணமலைக்கு சென்று, பின்னர் மட்டக்களப்பில் இருந்து கதிர்காமம் சென்று. அங்கிருந்து காலிநோக்கி சென்று பின்னர் யாழ்ப்பாணம் திரும் பவுள்ளனர். நாட்டில்ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, எரி பொருள் தட்டுப்பாடு, சூழல் மாசடைதல் போன்ற விடயங்களை எடுத்துக் காட்டும் முகமா கவே குறித்த பயணம் அமையவுள்ளதாக குறித்த இளைஞர்கள் தெரிவித்தனர். (4-6-18-33104)

# நுணாவில் ஐ.ஓ.சி. நிரப்பு நிலையத்தில் மதகுருமார்களுக்கு இன்று எரிபொருள்

(சாவகச்சேரி)

நுணாவில் ஐ.ஓ.சி. எரி பொருள் நிரப்பு நிலையத்தில் இன்று சனிக்கிழமை வடமாகாணத்தில் உள்ள மதகுருமார்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் விநியோகிக்கப்படும் என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வை.சிவராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் சனிக்கிழமை நண்பகல் 12மணி தொடக்கம் 1.30 மணி வரை வடமாகாணத்தில் உள்ள கத்தோலிக்க மதகுருமார்களுக்கும் பிற்பகல் 2மணி தொடக்கம் 4.30 மணிவரை வடமாகாணத்தில் உள்ள இந்து மற்றும் ஏனைய மதகுருமார்களுக்கும் நுணாவில் ஐ.ஓ.சி.யில் முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் வழங்கி வைக்கப்படும்.

அதேவேளையில் [illegible] கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் 12மணி வரை ஜே/311 தொடக்கம் ஜே/313 வரையான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கும் QR முறைமையின் கீழ் பெற்றோல் விநியோகிக்கப்படும். எரிபொருள் பெற வருபவர்கள் தமது பிரதேசத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஒன்றினை கைவ[illegible] தெரிவித்தார். (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணித் தகராறு

## மாமியார், மைத்துனரை தாக்கிய மருமகன்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமியார் மற்றும் மைத்துனர் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காணித் தகராறு காரணமாக மாமியார் மற்றும் மைத்துனர் ஆகியோரை குறித்த சந்தேகநபர் கடுமையாக தாக்கியுள்ளார்.

இதில் மாமியார் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2022

# 22 ஆவது தகுதிகாண் போட்டியில் ஸ்கந்தாஸ்ரார் அணி வெற்றி



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 22 ஆவது தகுதிகாண் போட்டியில் ஸ்கந்தாஸ்ரார் அணி, சிறிகாமாட்சி அணியை 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தாஸ்ரார் அணி 32.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. மிதுசாந்-44, தர்சனன்-29, அஜின்தன்-28, தனுஸன்-25 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சிறிகாமாட்சி அணி சார்பாக தயாதீபன் 7.5 ஓவர்களில் 18 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் துவாரகன் 9 ஓவர்களில் 40 ஓட்டங்களையும் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 24.4 ஓவர்களில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது.

மதூஸன் 24 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் ஸ்கந்தாஸ்ரார் அணி சார்பாக கானுஜன் 8 ஓவர்களில் 42 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் விஜிதரன் 6 ஓவர்களில் 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அஜின்தன் 4.4 ஓவர்களில் 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு (RATING) ஸ்கந்தாஸ்ரார் அணி 8.24 புள்ளிகளையும் சிறிகாமாட்சி அணி 2.34 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2022

# 21ஆவது தகுதிகாண் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி வெற்றி



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 21 ஆவது தகுதிகாண் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி மானிப்பாய் பரீஸ் அணியை 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொலிஸ்ரார் அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 33.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

கோகிராம்-28, கோமைந்தன்-22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மானிப்பாய் பரீஸ் அணி சார்பாக யாழினியான் 10 ஓவர்களில் 18 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் தயானந்தராஜ் 5.5 ஓவர்களில் 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கனிஸ்கார் 7 ஓவர்களில் 34 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணியினர் 37.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றனர். பானுஜன்-25, கயன்சன்-20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் அணி சார்பாக கோகிராம் 10 ஓவர்களில் 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கிரினாஸ் 1.3 ஓவர்களில் 2 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஐங்கரன் 5 ஓவர்களில் 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் பிரசன்னா 9 ஓவர்களில் 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.நகரின் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (RATING) ஜொலிஸ்ரார் அணி 7.54 புள்ளிகளையும் மானிப்பாய் பாரீஸ் அணி 2.30 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2678

Search for people, places and things

**பிரதீப்**



பெண் பிள்ளைகள் பெற்ற அப்பாக்கள் எல்லாம் அதிஷ்டசாலிகளே ஏனென்றால்...! அவர்களுக்கு மட்டும் இரண்டு தாய்.

**சந்தியா**

ஒருகாலத்தில் நாம் கடைக்கு சென்று வர பயன்படுத்திய வாகனம்



**கோகுலன்**

பச்சோந்தி கூட பத்து கலர் தான் மாற்றும். ஆனால் நம்மிடம் பழகுறவங்க பத்தாயிரம் கலர் மாற்றுவாங்க போல




**கம்சா**

இப்போ போக வேண்டாம் மனுசங்க குறுக்க போயிடுவாங்க நாம போற வேலை உருப்படாது ... ஒரு எலி கூட மாட்டாது.. வெயிட் பண்ணு



**கபிலன்**

அந்த வீட்டு Owner க்கு தெரியாம அத உலுக்கி எடுக்க நாங்க பட்ட பாடு இருக்கே



**பவதாரணி**

தோற்றுப் போய்விட்டோமே என உடைந்து போய் நிற்பதை விட தோல்வி தானே என்று உறுதியுடன் திறம்பட தளராத தன்னம்பிக்கையோடு எழுந்து ஓடி வாருங்கள். அடுத்த அடி தானாக வைத்து வெற்றிப் பயணத்தை தொடங்கியிருக்கும் மனமும் உடலும்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு

# ஐரோப்பிய ஒன்றியம் உறுதி

(கொழும்பு)

**இலங்கை எதிர்கொள்ளும் கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.**

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார மற்றும் பாது காப்புக் கொள்கைகளுக்கான உயர்பிரதிநிதி ஜோசப் பொரெல் ஃபோன்டெல்லெஸ் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியின் சட்டத்தரணி அலி சப்ரியை சந்தித்த போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை இதுவரை அடைந்துள்ள அபிவிருத்திகள் குறித்து இரு தரப்புக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றமும் இடம் பெற்றுள்ளது. (4)

## பங்குச் சந்தையின் தினசரி வருவாய் 3 பில்லியனை தாண்டியது

(கொழும்பு)

நீண்ட காலத்தின் பின்னர் கொழும்பு பங்குச் சந்தையின் தினசரி புரள்வு 3 பில்லியன் ரூபாவை நேற்று முன்தினம் கடந்துள்ளது.

இதன்படி, கொழும்பு பங்குச்சந்தை பரிவர்த்தனைகளின் முடிவில் 3.79 பில்லியன் ரூபாய் பரிவர்த்தனை புரள்வு பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நேற்று முன்தின வர்த்தக முடிவில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்களும் 149.00 புள்ளிகள் அதிகரித்து 8,229.14 புள்ளிகளாகவும், S&P Sri Lanka 20 சுட்டெண் 91.62 புள்ளிகள் அதிகரித்து 2,677.67 புள்ளிகளாகவும் காணப்பட்டன.

இந்த அதிகரிப்பு முந்தைய நாளுடன் ஒப்பிடுகையில் முறையே 1.84 சதவீதம் மற்றும் 3.54 சதவீத அதிகரிப்பாகும். 114 நிறுவனங்களும் இந்தப் பங்கு விலைக் குறியீட்டின் அதிகரிப்புக்கு சாதகமான பங்களிப்பைச் செய்துள்ளன.

தொடர்ந்து மூன்றாவது நாளாக அனைத்துப் பங்கு விலைக் குறியீடுகளும் 100 புள்ளிகளைத் தாண்டியிருப்பது சிறப்பு. (4)

# பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## சரத் வீரசேகர



(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீள கட்டியெழுப்புவதற்கு இனம், மதம், கட்சி பேதங்களை மறந்து ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த தவறியமையே கோட்டாபய ராஜபக்ஷ செய்த தவறு என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய கொள்கை விளக்க உரை காலத்திற்கு மிகவும் பொருத்தமானது. நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீள கட்டியெழுப்புவதற்கு இனம், மதம், கட்சி, பிரதேசம் என அனைத்து பேதங்களையும் கடந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இது.

நாடு இதற்கு முன்னர் இதுபோன்ற தொரு நெருக்கடியை எதிர்கொண்டிருக்கவில்லை என்பதை நாமறிவோம். இந்த நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு நாட்டின் அனைத்து மக்களும் அனைத்து தரப்பினரும் பங்களிப்புச் செய்ய வேண்டியது அவசியம்.

அத்துடன் அமைதியான போராட்டங்கள் தவிர்ந்த நாட்டை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் தொடருமானால் ஒரு போதும் எம்மால் வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொள்ள முடியாமற் போகும். அவ்வாறு வெளிநாட்டு செலாவணியை தேட முடியாது போனால் எரிபொருள், சமையல் எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையையே ஏற்படும்.

அதனால் கடந்தவற்றை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் செயற்பட வேண்டிய காலம் இது எனத் தெரிவித்தார். (4)


# கண்ணீர் அஞ்சலி

அமரர். கிருஷ்ணமூர்த்தி புஷ்பம்



எமது சக ஆசிரியை

திருமதி. தபோதினி விமலராஜா அவர்களின் அன்புத் தாயார் அமரர். கிருஷ்ணமூர்த்தி புஷ்பம் அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

(12356)

# வகுப்பு

யாழ்ப்பாணத்தில் தரம் 9, 10, 11 மாணவர்களுக்கு கணிதம் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (12323)

தொடர்பு
077 364 6608


# இராசிபலன்

06.08.2022
ஆடி 21, சனிக்கிழமை
நவமி முன்னிரவு 10.01 மணிவரை
விசாகம் பிற்பகல் 2.41 மணிவரை
சுபநேரம்- 3.04-4.34 மணிவரை
இராகுகாலம் - 9.04-10.34மணிவரை
சந்திராஷ்டமம்-ரேவதி, அச்சுவினி

**வளவன்**

**மேஷம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள்.

**கடகம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலம் சீராகும்.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

**துலாம்:** எதிர்பாராத வகையில் தனவரவுகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வழிபாடு குதூகலம் தரும், விரும்பிய காரியங்கள் விரும்பியபடியே கைகூடும்.

**தனுசு:** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், எதிர்பாராத வகையில் ஊர் மாற்றம் இடமாற்றம் என்பன இடம்பெறலாம், சுபவிரயங்கள்

**மகரம்:** வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம்.

**கும்பம்:** தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

நீ விரும்பாத எதுவும் உன்னோடு இல்லாமல் பார்த்துக்கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



### மனம் மாறியது

மேலையூர் மாதவன் பட்டணத்து அரசாங்க அலுவலகம் ஒன்றில் வேலை செய்து வந்தான். தினமும் காலையில் தன் ஊரிலிருந்து காட்டு வழியே போய் பட்டணம் அடைந்து அலுவலகத்தில் வேலை செய்து விட்டு மாலையில் தன் ஊருக்குத் திரும்பி வருவது வழக்கம். சிறுவயதில் தந்தையை இழந்த அவனை அவனது தாய் தான் மிகவும் சிரமப்பட்டு வளர்த்துப் பெரியவனாக்கினாள்.

மாதவன் மிக நன்றாகப் பாடக் கூடியவன். ஒருநாள் இரவு அவனது தாய் அவனது பாட்டைக் கேட்டவாறே உயிர் நீத்தாள். இதனால் அவன் உலகில் தனியாக விடப்பட்டான். அவன் மனம் எதிலும் நாட்டம் கொள்ளவில்லை. ஏதோ சமைத்துச் சாப்பிட்டு விட்டு அலுவலகம் போய் வரலானான். அவன் மிகவும் சிரமப்படுவதைக் கண்ட அவனது நண்பர்கள் "நீ ஒரு கல்யாணத்தைச் செய்து கொள்" என்று யோசனை கூறினார்கள்.

கல்யாணம் என்று கேட்டதும் அவன் கண்முன் நின்றவள் அடுத்த வீட்ட அபர்ணா தான். அவள் தந்தை ஒரு வியாபாரி அவரது ஒரே மகள் என்பதால் அபர்ணா தன் இஷ்டப்படி வளர்ந்தாள்.

அவள் தினமும் அவ்வூர் கோவிலுக்கு மாலை வேளையில் போய் வருவாள். கோவிலுக்குப் போகுமுன் மாதவனின் வீட்டின் எதிரே உள்ள நந்தவனத்திற்குப் போய் பூப்பறித்து எடுத்துச் செல்வாள்.

மாதவன் அவளைப் பார்த்த போதிலும் அவளுடன் ஒரு வார்த்தை கூட பேசியதில்லை. ஆனால் ஒரு நாள் மாலை அவன் துணிச்சலுடன் அவள் முன் போய் நின்று "நான் உன்னை விரும்புகிறேன். நீ என்னை மணந்து கொள்கிறாயா?" என்று கேட்ட விட்டான்.

அதைக்கேட்ட அபர்ணா திகைத்துப் போனாள். ஆனால் மறுவினாடியே தன்னை சமாளித்துக் கொண்டு "உனக்குப் பாடத் தெரியுமேயொழிய வீரச் செயல்களைப் புரிய முடியுமா? பணக்காரன் என்று தலை நிமிர்ந்து நிற்க முடியுமா? உன் அழகை எப்போதாவது கண்ணாடியில் பார்த்திருக்கிறாயா? இனிமேல் என்னிடம் இந்த மாதிரிப் போசாதே" என்று கூறி விட்டுச் சட்டெனப் போய் விட்டாள்.

மாதவன் பதில் பேச நினைத்தும் அவனால் முடியவில்லை. ஏனெனில் அபர்ணா அங்கே இல்லையே. அவனுக்கு அது பெருத்த அவமானமாகப்பட்டது.


வாழ்க்கை இனி எதற்கு என எண்ணி அங்கிருந்து காட்டை நோக்கி நடந்தான். நிலவொளியில் அவன் அங்கே ஒரு பாறை மீது அமர்ந்து தன் தாயை நினைத்து மனம் உருகிப் பாடலானான். அவன் பாட்டை முடித்த போது சற்று தூரத்திலிருந்த மரத்திலிருந்து மூன்று பிசாசுகள் "பேஷ்! பேஷ்! பாட்டு மிக நன்றாக இருக்கிறதே" என்று கை தட்டியவாறே அவன் முன் வந்து நின்றன. வாழ்க்கையை வெறுத்து விட்ட மாதவன் அவற்றைக் கண்டு பயப்படவில்லை.

அவை "உன் பாட்டு நன்றாக இருந்தாலும் அதில் சோகரசமே ததும்பியது. மகிழ்ச்சியைத் தரும் விதமாய் ஒரு பாட்டு பாடு" என்று கூறின. (தொடரும்)

# சிலப்பதிகாரம்

## கானல் வரிகள்

27



ஆனால் அது தன் வாழ்வைக் குழப்பப் போகிறது என்பது மாதவி அப்போது அறிந்திருக்கவில்லை.

'இந்த இனிமையான சூழ்நிலைக்கு நல்ல இசை மேலும் இனிமை சேர்க்கும், இல்லையா?'என்றாள்.

'இருக்கலாம்!' அவன் மறுபடியும் அக்கறையில்லாமல் பதில் சொன்னான்.

கோவலன் இசையைக் கற்றவன் இல்லை. என்றாலும் கேள்வி ஞானத்திலேயே இசையின் நுணுக்கங்களை நன்றாக அறிந்திருந்தான்.

வசந்தமாலை யாழை எடுத்துச் சுருதி கூட்டினாள். மாதவி அதை வாங்கிப் பணிவுடன் கோவலனிடம் நீட்டினாள். 'பாடுங்கள்' என்றாள்.

'நானா?' என்றான் கோவலன் வியந்து.

'உங்கள் இசையைக் கேட்கும் சுகத்தை ஒரு முறையேனும் எனக்குக் கொடுங்களேன்' என்றாள். மாதவி கொஞ்சலாக கேட்கும் என்பதில் கொஞ்சம் கூடுதல் அழுத்தம் கொடுத்தாள்.

அந்த ஒருமுறை தான் இறுதி முறை என்பதை அவள் அப்போது அறிந்திருக்கவில்லை!

கோபத்தை ஒவ்வொருவர் வெளிப்படுத்தும் முறை ஒவ்வொருவிதமாக இருக்கும். மிக அமைதியுடனும் சொல்லும் எதையும் மறுக்காமலும் கேட்கிறவற்றுக்கு பதில் சொல்வதும் அதே சமயம் தானே எதுவும் பேசாமல் இருப்பதும் சிலர் வழக்கம்.

கோவலன் அந்த ரகம். மறுக்காமல் யாழை வாங்கிக் கொண்டான்.

கானல்என்பது உஷ்ண அலை. கானல் நீர் என்பது அந்த அலை சூரிய ஒளியில் நீர் போலத் தோன்றுவது. 'வரிகள்' என்பவை இசைப் பாடல்கள். அது கானலோடு சேரும் போது வெப்பமான இசை பிறக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 44

13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்த துருக்கிய நாடோடிகளின் பல்வேறு குழுக்கள் மங்கோலிய வெற்றியாளர் செங்கிஸ்கானின் படைகளின் ஒரு பகுதியாக மாறிய பிறகு, மங்கோலிய மற்றும் துருக்கிய கூறுகளின் இணைவு நடந்தது. மேலும் ரஷ்யா மற்றும் ஹங்கேரியின் மங்கோலிய படையெடுப்பாளர்கள் ஐரோப்பியர்களால் டாடர்கள் என்று அறியப்பட்டனர்.

செங்கிஸ்கானின் பேரரசு உடைந்த பிறகு, டாடர்கள் குறிப்பாக மங்கோலியவின் மேற்குப் பகுதியுடன் அடையாளம் காணப்பட்டனர். இப்பகுதி ஐரோப்பிய ரஷ்யாவின் பெரும்பகுதியை உள்ளடக்கியது. இது கோல்டன் ஹோர்ட் (The Golden Horde) என்று அழைக்கப்பட்டது.

இந்த டாடர்கள் 14ஆம் நூற்றாண்டில் சுன்னி (Sunni) இஸ்லாமாக மாற்றப்பட்டனர். உட்பிளவுகள் மற்றும் பல்வேறு வெளிநாட்டு அழுத்தங்கள் காரணமாக, கோல்டன் ஹோர்ட் 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வோல்கா நதியில் கசான் மற்றும் அஸ்ட்ராகான் சுதந்திர டாடர் பிராந்தியங்களாகவும்(khanates) மேற்கு சைபீரியாவில் சிபிர் சுதந்திர டாடர் பிராந்தியமாகவும் மற்றும் கிரிமியா சுதந்திர டாடர் பிராந்தியமாகவும் சிதைந்தது.

16ஆம் நூற்றாண்டில் ரஷ்யா இந்த கானேட்டுகளில் முதல் மூன்றைக் கைப்பற்றியது. ஆனால் கிரிமியன் கானேட் 1783 இல் ரஷ்யா பேரரசி கேத்தரின் தி கிரேட்டால் (Catherine the Great) ரஷ்யாவுடன் இணைக்கப்படும் வரை ஓட்டோமான் துருக்கியர்களின் அடிமை மாநிலமாக இருந்தது.

1954 முதல், கிரிமியா மாநிலம் உக்ரைனிய SSR இன் நிர்வாகப் பகுதியாக இருந்தது. சோவியத் ஒன்றியம் கலைக்கப்படுவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு, ஜனவரி 20, 1991 அன்று கிரிமிய இறையாண்மை சம்பந்தமாக கிரிமியாவில் வாக்கெடுப்பு ஒன்று நடைபெற்றது.

**1991 கிரிமிய இறையாண்மை வாக்கெடுப்பு**

**20 ஜனவரி 1991, சோவியத் உக்ரைனின் கிரிமியன் பிராந்தியத்தில் இறையாண்மை மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 1945 இல் ஒழிக்கப்பட்ட கிரிமியன் தன்னாட்சி சோவியத் சோசலிச குடியரசை மீண்டும் நிறுவ விரும்புகிறீர்களா என்று வாக்காளர்களிடம் கேட்கப்பட்டது. இந்த முன்மொழிவு 94% கிரிமியன் வாக்காளர்களால் (ஆம் என்ற பதிலால்) அங்கீகரிக்கப்பட்டது.**

இதைத் தொடர்ந்து உக்ரைனிய SSR இன் உச்ச சோவியத்தின் மூலம் கிரிமியாவுக்கு தன்னாட்சி குடியரசின் அந்தஸ்து வழங்கப்பட்டது. உக்ரைன் சுதந்திரமடைந்தபோது, கிரிமியா தன்னாட்சி குடியரசாக இருந்தது. இம்மாநிலம் கருங்கடல் கடற்படை தீபகற்பத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததால் ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் இம்மாநிலம் சம்பந்தமாக பதற்றங்களுக்கு வழிவகுத்தது.

கிரிமியா உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்திருக்கக் கூடாத ரஷ்யப் பிரதேசம் என்று ரஷ்யாவின் முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் ரஷ்ய பாராளுமன்ற கீழ் சபையின் (Russian Duma) வழக்கமான அறிவிப்புகளால் பிரிவினைவாதிகள் தங்கள் முயற்சிகளில் ஊக்குவிக்கப்பட்டனர்.

**1980 களின் பிற்பகுதியில் தொடங்கி, கிரிமியா தீபகற்பத்தில் சுமார் 250,000 கிரிமியன் டாடர்களின் வருகையால் கிரிமியா உக்ரைனின் நிலைமை சிக்கலானது. இரண்டாம் உலகப் போரின் முடிவில் நாடு கடத்தப்பட்டிருந்த இவர்கள் தமது வரலாற்றுத் தாயகமான கிரிமியாவுக்குத் திரும்பினர்.**

1992 பெப்ரவரி 26 அன்று, கிரிமியன் பாராளுமன்றம் கிரிமியா மாநிலத்தை கிரிமியா குடியரசு என்று மறுபெயரிட்டது.

மே 5, 1992 இல் கிரிமியன் உயர் சபையில் (Supreme Council) ஓகஸ்ட் மாதம் திட்டமிடப்பட்ட வாக்கெடுப்பின் அடிப்படையில் சுதந்திரத்தை அறிவித்தது. இருப்பினும், உக்ரைனிய பாராளுமன்றம் இந்த அறிவிப்பு சட்ட விரோதமானது என்று தீர்ப்பளித்தது, மேலும் கிரிமியன் உயர் சபைக்கு அதை இரத்து செய்ய மே 20 வரை காலக்கெடு வழங்கியது.

மே 22 அன்று கிரிமியன் உயர் சபை உத்தரவுக்கு இணங்கினாலும், வாக்கெடுப்பு இரத்து செய்யப்படுவதற்கு பதிலாக ஒத்திவைக்கப்பட்டது எனத் தீர்மானித்தது.

இறுதியாக ஜூன் 1992 இல், கிரிமியா மாநிலமும் உக்ரைனும் ஒரு சமரசத்தை எட்டின. அதாவது கிரிமியா "தன்னாட்சி குடியரசு" என்ற அந்தஸ்தைக் குறிக்கும் என்றும் ஆனால் உக்ரைனின் ஒருங்கிணைந்த பகுதியாக சிறப்புப் பொருளாதார அந்தஸ்து வழங்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(தொடரும்)

## தென் சீன கடல் பகுதியில் போர் அபாயம்

# தாய்வானை சுற்றி வரும் அமெ., சீன போர்க்கப்பல்கள்!

**(தாய்பே)**

**சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசி தாய்வான் சென்றதையடுத்து சீனா-அமெரிக்கா இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் தாய்வானை சுற்றி அமெரிக்க, சீன போர்க் கப்பல்கள் முற்றுகையிட்டுள்ளதால் தென் சீன கடல் பகுதியில் போர் அபாயம் ஏற்பட்டுள்ளது.**



சீனாவில் கடும் எதிர்ப்பையும் மீறி அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி ஒரு நாள் பயணமாக கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்க விமானப்படை விமானத்தில் தனது நாட்டு குழுவினருடன் தாய்வான் சென்றிருந்தார்.

இது குறித்து நான்சி பெலோசி கூறும்போது தாய்வானுடன் கொண்டுள்ள நட்புறவை பெருமையாகக் கருதுகிறோம்.

தாய்வானுக்கு அளித்த உறுதியை கைவிடமாட்டோம் என்பதை தெளிவுபடுத்துவதற்காக எங்கள் குழுவுக்கு வந்துள்ளது என்றார்.

இரு நாடுகளுக்கு இடையேயான உறவு மற்றும் ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என தாய்வான் வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதிக்கு அடுத்த நிலையில் உயர் பதவியிலுள்ள அந்நாட்டு சபாநாயகர் தாய்வான் வந்தது கடந்த 25 ஆண்டுகளில் இதுவே முதல் தடவையாகும். தாய்வானின் அனைத்துப் பிரதிநிதிகளையும் நான்சி பெலோசி சந்தித்து பேசியுள்ளார்.

நான்சி பெலோசியின் இந்த பயணம் சீனாவுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. தாய்வானுக்கு தனிநாடு என்ற அங்கீகாரத்தை அமெரிக்கா வழங்கியுள்ளதாக சீனா கருதுகிறது.

இவ்விடயம் குறித்து சீன இராணுவம் கூறும்போது, நாங்கள் தயார் நிலையில் உள்ளோம் நான்சி பெலோசியின் பயணத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இராணுவ நடவடிக்கைகளை தொடங்குவோம்.இது சீனாவின் இறையாண்மையை பாதுகாக்க அவசியமான நடவடிக்கை என தெரிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறை மீதான நாட்டமே போராட்டம் நீர்த்துப்போக காரணம்

## ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

காலிமுகத்திடல் போராட்டக் காரர்களின் வன்முறை மீதான நாட்டமே போராட்டம் நீர்த்துப் போகக் காரணமாக அமைந்து விட்டது என்று ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய தரப்புகளுடன் நேற்று முன்தினம் சர்வகட்சி அரசாங் கம் தொடர்பான பேச்சுவார்த் தையில் கலந்து கொண்டபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளி யிட்ட அவர், ஆரம்ப காலத்தில் கோட்டா கோ கம உள்ளிட்ட போராட்டக்களங்கள் அறவழிப் போராட்டங்களாக, வன்முறை தவிர்ப்பு போராட்டமாக இருந்த நிலையில் அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்களின் ஆதரவு கிடைத்தது.

பாதுகாப்புத் தரப்பினரும் அவ்வாறான அமைதிப் போரா ட்டங்களை அடக்க தயக்கம் காட்டினர்.

ஆனால் ஜனாதிபதிமாளிகை மற்றும் ஏனைய அரச கட்டடங் களை கைப்பற்றவும் அரசாங் கத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தவும் போரா ட்டக்காரர்கள் என்றைக்கு வன் முறையை நாடத் தொடங்கினார் களோ அன்றைக்கே போராட்டம் நீர்த்துப் போய்விட்டது.

அமைதி வழியில் ஆரம்பித்த போராட்டம் கடைசியில் வன் முறை காரணமாக தோல்விய டைந்து விட்டது என்றும் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியு ள்ளார். (4)

# எதிர்வரும் 11 ஆம் திகதி நாடு திரும்புகிறார் கோட்டா?



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 11 ஆம் திகதி நாடு திரும்புவார் எனத் தெரியவருகின்றது.

இலங்கையில் ஜனாதிபதி பதவியை வகித்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் எழுச்சி வெடித்தது. கடந்த ஜூலை 9 ஆம் திகதி ஜனாதி பதி மாளிகை முற்றுகையிடப் பட்டது.

இதையடுத்து ஜூலை 13 ஆம் திகதி நாட்டிலிருந்து ஜனா திபதி வெளியேறினார். மாலை தீவு சென்ற அவர், அங்கிருந்து சிங்கப்பூர் புறப்பட்டார். ஜூலை 14 ஆம் திகதி இராஜிநாமாக் கடித த்தை அனுப்பி வைத்திருந்தார்.

இந்நிலையிலேயே அவர் எதிர்வரும் 11 ஆம் திகதி நாடு திரும்புகின்றார் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினால் முன்னாள் ஜனாதி பதி என்ற வகையில் அவருக்குத் தேவையான பாதுகாப்பு உள்ளி ட்ட வசதிகளை அரசு செய்து கொடுக்கும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்துள்ளார். (4)

# சீரற்ற காலநிலையால் புகையிரத சேவைகள் ரத்து

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக பல புகை யிரத சேவைகள் இரத்து செய்யப் பட்டுள்ளன.

இலங்கை புகையிரத திணை க்களம் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளது.

உடரட புகையிரத வீதி யில் ஏற்பட்ட மண்சரிவு கார ணமாக கொழும்பு கோட்டை மற்றும் பதுளைக்கு இடையி லான கடுகதி புகையிரத சேவை கள் சில இரத்துச் செய்யப்பட வுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின் றது. (4)

# குரங்கு அம்மை தொற்றுக்கு முகங்கொடுக்கத் தயார்

## தொற்று நோய் ஆய்வுப் பிரிவு

(கொழும்பு)

குரங்கு அம்மை தொற்றுக்கு முகங்கொடுக்கத் தயாராகவுள் ளதாக தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு பிரதானி விசேட மருத்துவர் சமித கினிகே இதனைத் தெரிவித்துள்ளார்.

குரங்கு அம்மை தொற்று நாட் டில் பரவுவதற்கான சாத்தியக்கூறு கள் அதிகம் காணப்படுவதாக வும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இதுவரை நாட்டில் குரங்கு அம்மை தொற்றுக் குள்ளான எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# சுற்றுலா பயணிகளுக்கு விசேட எரிபொருள் அனுமதிச் சீட்டு

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப்.பயணிகளுக்கு விசேட எரிபொர்ருள் அனுமதிச் சீட்டுக் களை வழங்குவது தொடர்பில் சுற்றுலா அமைச்சு ஆராய்ந்து வருவதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள் ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் சுற்றுலாப் பயணி களிடமிருந்து பல முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றுள் ளது.

இந்த விடயம் தொடர்பில் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவை சந்தித்து கலந் துரையாடுவதற்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

விமான நிலையத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பய ணிகளுக்கு விசேட எரிபொருள் அனுமதிச் சீட்டு வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித் தார். (4)


# வேலை வாய்ப்பு

பொருத்தமான ஆளணி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பொருத்தமானவர்களிடம் இருந்து (25-60 வயதுக்குட்பட்டவர்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ முழுப்பெயர்
★ நிரந்தர முகவரி
★ தபால் முகவரி
★ பிறந்ததிகதி
★ பால்
★ விவாகநிலை
★ தே.அ.அ.இல
★ கல்வித்தகைமை
★ மொழித்தகைமை (சிங்களம், ஆங்கிலம்),
★ மேலதிக தகைமை/ அனுபவம்
★ தொலைபேசி இலக்கம்
★ மின்னஞ்சல் முகவரி

உள்ளிட்ட விடயங்கள் அடங்கலாக விண்ணப்பங்களை,

valampuriijaffna@gmail.com

என்ற மின்னஞ்சல் மூலமாக அல்லது,

வலம்புரி
இல. 3,2 ஆம் ஒழுங்கை
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ ஒப்படைக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.08.2022

பொதுமுகாமையாளர், வலம்புரி.


# நயினை அம்பாளின் திருவடியில் சரணடைந்தார் அறங்காவலர் அமரர்.கா.ஆ.தியாகராசா



மனிதனாகப் பிறந்த அனைவரும் என்றோ ஒருநாள் இறப்பது நிச்சயம். மனித வாழ்வின் முடிவும் அதுதான். ஆனால் தனக்குவமையில்லாத மனிதர்களின் மறைவு யாராலும் நிரப்ப முடியாத இடை வெளியை தந்து விடுகிறது. எக்காலத்திலும் யாராலும் நிரப்ப முடியாத இழப்பை அண்மையில் அம்பாளின் திருவடிகளில் சங்கமமான நயினை அம்பாளின் மரபு வழி அறங்காவலராகவும் ஆளுமை அருள் நிறைந்த தனித்துவமான தலைவனாகவும் திகழ்ந்த அமரர்.கா.ஆ.தியாகராசாவின் மறைவு ஏற்படுத்தியுள்ளது.

ஆன்மிக அருள் நிறைந்த அருளாளனான தெய்வீக அறச் சிந்தனையாளனை, ஆன்மீக வழிகாட்டியை, புராண இதிகாசங்களின் படிப்பில் பயன் சொல்கின்ற சொல் அருவியை, பண்பயின்ற ஓதுவா மூர்த்தியை, அரச உயர் பதவி வகித்த அரச சேவையாளனை நயினை மண் இழந்து நிற்கின்றது.

மனிதரில் சிலரால் எழுத முடியும். சிலரால் பேச முடியும். சிலரால் பண்ணோடு பாட முடியும். இன்னும் சிலரால் ஆன்மிக பக்தி நெறியோடு வாழ முடியும். ஆனால் மேற்சொன்ன அத்தனை கைங்கரியங்களும் அமரர் அவர்களிடம் குடிகொண்டிருந்தது எனின் அது தெய்வீக அருள் சக்தியின் வெளிப்பாடாகும்.

நயினை சித்தர் பாடியவாறு "நற்றவ நிலையில் சே எனை நிறுத்தி நாத நாதாந்தமும் காட்டி முற்றுமாய் நிறைந்த பூரணானந்த முத்திதா நாகபூஷணியே" என்று அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

நயினை கலாபூஷணம்
நா.கோபாலகிருஷ்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான மனிதன் எப்போதும் அறம் பற்றியே சிந்திக்கிறான். பாமர மனிதன் சுகம் பற்றியே எண்ணுகிறான்! - கன்பூஷியஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனித மனங்களைப் பதறவைத்த கொடுஞ் செயல் கண்டு...

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிருந் தொழும்*

என்றார் வள்ளுவர்.

இந்த உலகில் எல்லா உயிர்களும் தொழக் கூடியவர்கள் இருக்கிறார்களா? என்று யாரேனும் கேட்டால், அதற்கு வள்ளுவர்;

இந்த உலகில் பிற உயிர்களைக் கொல்லாதவரை புலால் உண்ணாதவரை எல்லா உயிர்களும் தொழும் என்றார்.

ஆக, பிற உயிர்களை வதைக்காமல் வஞ்சிக்காமல் அவற்றுக்குத் தீங்கு செய்யாமல் வாழ வேண்டும்.

மாறாக பிற உயிர்களை நாம் வதைப்போமாக இருந்தால் அந்தப் பாவம் நிச்சயம் நம்மை தண்டிக்கும் என்பதை அறநூல்கள் எடுத்தியம்புகின்றன.

எனினும் எங்கள் மண்ணில் ஜீவகாருண்யம் பற்றிய சிந்தனை சிறுத்துவிட்டதென்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், நாய்க்குட்டிகளை வீதிகளில் கொண்டு வந்து போடுவது, கண்முழிக்காத பூனைக் குட்டிகளை உரப்பைகளில் கட்டி சந்தை ஓரங்களில் விடுவது என்ற மிகப்பெரிய பாவ காரியங்கள் நடந்தாகின்றன.

தரம் ஒன்று தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் வரையில் சமயக் கல்வி கட்டாய பாடமாக – பொதுப்பாடமாக இருக்கின்றபோதிலும் ஈவிரக்கம், கருணை, பிற உயிர்கள் மீது அன்பு காட்டுதல் என்பன நம் மத்தியில் நலிவடைந்து போவதைக் காண முடிகிறது.

இதற்குக் காரணம் என்ன? என்பது பற்றி நம் கற்றறிந்த சமூகம் ஆராய வேண்டும்.

அதாவது சமயம் என்ற பாடநெறி ஜீவகாருண்யத்தை வலிமைப்படுத்துவதுடன் மற்றவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு போதிக்கப்படுகின்றது.

ஆனாலும் சமயம் என்ற பாடம் பரீட்சையில் உச்சக்கட்ட பெறுபேற்றை அடைவதற்கானதாக இருக்கின்றதேயன்றி, நடைமுறையில் சமயக் கல்வி தோற்றுவிட்டது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

உண்மையில் பதினொரு ஆண்டுகளாக பாடசாலையில் கற்கின்ற சமயக் கல்வி உரிய இலக்கை அடைந்திருக்குமாயின் குரோதங்களும் விரோதங்களும் வஞ்சிப்புகளும் உயிர் வாழ முடியாமல் போயிருக்கும்.

ஆனால் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்பன மனித மனங்களில் உச்சமாக வளர்ந்து நிற்கிறதெனில் பாவ புண்ணியம் என்ற கருத்துக்களும் இறை நம்பிக்கைகளும் நம் மத்தியில் இருந்து விலகி அவை வெறும் நடிப்பாக மாறிவிட்டன என்பதை துணிந்து கூறமுடியும்.

உண்மை, கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் சில இளைஞர்கள் நாய் ஒன்றை வெட்டி சிதைத்து அதனை முகநூலில் பதிவிட்ட சம்பவம் மனித மனங்களை பதற வைத்தன.

என்னே! கொடுமை. இப்படியும் ஓர் ஈனத்தனமா? என்று ஜீரணிக்க முடியாத அளவில் அந்தச் சம்பவம் கொடூரம் நிறைந்ததாகக் காணப்பட்டது.

இங்குதான் நாய்க்குட்டிகளைத் தெருவில் விடுவது, பூனைக்குட்டிகளை உரப்பைகளில் கட்டி சந்தைகளில் போடுவது என்ற கொடுமைத்தனங்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படாததன் தவறு தெரிகிறது என்பதை இனியேனும் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்வது அவசியமானதாகும்.

## சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா நுழைந்த
# 46 இலங்கையர்கள் கப்பல் மூலம் நாடு திரும்பவுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து தமது நாட்டுக்குள் பிரவேசிக்க முயன்ற 46 சட்டவிரோத குடியேற்றக்காரர்களை ஏற்றிக்கொண்டு அவுஸ்திரேலிய கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த 46 பேர் கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதியன்று சட்டவிரோதமாக கடல்வழியாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்டபோது அவுஸ்திரேலிய எல்லைப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களே அவுஸ்திரேலிய கப்பல் மூலம் கொழும்புக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

அவுஸ்திரேலிய எல்லைப் படைக் கப்பலில் இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்கள் குழுவொன்று மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவுஸ்திரேலிய எல்லைப் படையின் தெற்காசியாவிற்கான பிராந்திய பணிப்பாளர் கொமாண்டர் கிறிஸ் வோட்டர்ஸ், ஆட்கடத்தலை தடுப்பதில் இலங்கை பங்காளிகளுடனான உறவை அவுஸ்திரேலிய அரசாங்கம் உயர்வாக மதிப்பதாக குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயற்சித்த அனைவரும் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம)

## நாட்டைப் பற்றி சிந்தித்து
# அனைத்து அரசியல் கட்சிகளும் சர்வகட்சியில் இணைய வேண்டும்
## தொடம்பஹல சந்தசிறி தேரர்

(கொழும்பு)

நிலையான பொருளாதாரக் கொள்கையொன்றை அமுல்படுத்துவதன் மூலம் நாட்டின் நெருக்கடியான பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதற்கு பலமான அரசாங்கம் அவசியமானது எனவும், அதற்கு சர்வகட்சி ஆட்சி மிகவும் முக்கியமானது எனவும் இலங்கை அமரபுர மகா நிகாயவின் அதியுயர் மகாதலைவர் அக்கமஹா பண்டித வண. தொடம்பஹல சந்தசிறி தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் மாலை தேரர் அவர்களை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்து நாட்டை தன்னிறைவு அடையச் செய்ய தேவையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று கூறிய தேரர் அவர்கள், திறமையின் அடிப்படையில் வேலை வாய்ப்புகளை இலக்காகக் கொண்ட தேசிய கல்விக் கொள்கையொன்றை உருவாக்குதல் மற்றும் எதிர்கால உலகை வெல்லக்கூடிய பொருத்தமான பாடங்களை பாடசாலை பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)

## கிளிநொச்சியில் இளம் பெண்ணின்
# சங்கிலியை அறுத்த திருடனை நையப்புடைத்து பொலிஸில் ஒப்படைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இளம் பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்த திருடனை நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி நகர் பகுதியில் பேருந்திலிருந்து இறங்கிச் சென்ற பெண்ணை பின்தொடர்ந்த நபர் ஒருவரே குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி அணிந்திருந்த சங்கிலியை அறுக்க முற்பட்ட போது, யுவதி தடுக்க முயற்சித்ததுடன், மக்களின் உதவியைக் கோரி சத்தமிட்டுள்ளார்.

இதன்போது, குறித்த திருடன் கூரிய ஆயுதத்தால் யுவதியை காயப்படுத்தியதுடன், சங்கிலியை அறுத்து தப்பி செல்ல முற்பட்டுள்ளார்.

இந்த நிலையில், அப்பகுதியில் திரண்ட மக்கள் குறித்த திருடனை மடக்கி பிடித்து நையப்புடைத்ததுடன், சங்கிலியை மீட்டு யுவதியிடம் கையளித்ததுடன் பொலிஸாரை அழைத்து திருடனை ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-100)

## நல்லூர் முருகன் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு இலங்கை இளங்கலைநெறி மன்றத்தினால் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு நிறைவு ஐந்தாம் திருவிழாவான இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.10 மணி வரை இசையரங்கு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பாட்டு-சிவராஜ மனோகரன் திலக்சன், வயலின்-பா.சியாம்கிருஷ்ணா, மிருதங்கம்-ந.கேதாரநாத், கடம்-ஜி.திவ்வியசாகர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15 மணி முதல் 8.05 மணிவரை இடம்பெறவுள்ள இசையரங்கில் பாட்டு-ஜீவநந்தினி லம்போதரன், வயலின்-கே.வேலதீபன், மிருதங்கம்-வ.ரமணசர்மா, கெஞ்சிரா-த.லயசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (4)

## சுமார் 200 ரூபாயினால் சமையல் எரிவாயுவின்
# விலை குறைப்பு

(கொழும்பு)

லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் விலை எதிர்வரும் 8ஆம் திகதி நள்ளிரவுடன் குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், 12.5 கிலோகிராம் கொள்கலன் ஒன்று சுமார் 200 ரூபாயினால் குறைக்கப்படும் என லிட்ரோ நிறுவன உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

லிட்ரோ சமையல் எரிவாயு விலை நேற்று நள்ளிரவுடன் குறைக்கப்படும் என முன்னதாக அதன் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்திருந்தார்.

எனினும், எதிர்வரும் திங்கட்கிழமை நள்ளிரவுடன் லிட்ரோ சமையல் எரிவாயு விலை குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அணுசக்தி பயன்படுத்துவது குறித்து ஆராய வேண்டும்
## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

இலங்கை அணுசக்தியை பயன்படுத்துவது குறித்து சிந்திக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பை தளமாக கொண்ட அட்வொகொர்ட்டா நிறுவகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் ரிவோர்ம் நவ் பொருளாதார மாநாட்டில் உரையாற்றுகையில் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். அணுசக்தியை இலங்கை பயன்படுத்துவது குறித்து அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வது குறித்து நாங்கள் தீவிரமாக சிந்திக்க வேண்டும்.

அதிக வலுசக்தியிருந்தால் அதிகளவு வலுசக்தியை இந்தியாவிற்கு விற்பனை செய்யலாம் அதேவேளை அதிகளவு மீள்புதுப்பிக்கதக்க சக்தியை இலங்கையில் வைத்திருக்கலாம் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்
## மன்னாரில் பயங்கரவாத சட்டத்தில்
# கைதான இருவர் விடுதலை

(மன்னார்)

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் பொழுது நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கைகளில் மன்னார் மாவட்டத்தில் பள்ளிமுனை பகுதியை சேர்ந்த நபர் ஒருவரும் தள்ளாடி இராணுவ முகாம் முன்னால் இராணுவ அதிகாரி ஒருவருமாக இருவர் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர்

நீண்ட காலமாக அவர்களுக்கான பிணை நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பெற்றே அவர்களை விடுவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை உயர் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்ய தயார் நிலையில் இருந்த பொழுது குறித்த வழக்கு தொடர்பான விபரங்களை பரிசீலித்த சட்டமா அதிபர் திணைக்களம் குறித்த இருவரையும் விடுவிப்பதற்கான கடிதத்தை மன்னார் நீதிவான் நீதிமன்றத்திற்கு நேற்று முன் தினம் வியாழக்கிழமை அனுப்பி வைத்திருந்தது.

இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை குறித்த வழக்கு மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சம்மந்தப்பட்ட இருவரையும் வழக்கில் இருந்து முழுமையாக விடுவிக்க மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி A.S.ஹைற் பத்துல்லா உத்தரவு இட்டார். (4-6-285)



வண்ணையம்பதி ஸ்ரீ வேங்கடவரதராஜப்பெருமாள் ஆலயத்தில் வரலட்சுமி விரத உற்சவம் நேற்று காலை சிறப்பாக இடம்பெற்றது. பின்னர் வரலட்சுமி நூல்காப்பும் பக்தர்களுக்கு சிவாச்சாரியார்கள் வழங்கி வைத்தனர். (படம்:-சிவசாந்தன்)

## வீடுடைத்து 3 பவுண் நகை திருட்டு

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெட்டுக்கான் பகுதியில் மூன்று பவுண் நகை களவாடப்பட்டுள்ளது.

கரணவாய் தெற்கு, வெட்டுக்கான் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலேயே நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் வெளியே சென்ற சமயம் அதனை சாதகமாக பயன்படுத்தி வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒன்றரை பவுண் தங்கச் சங்கிலி மற்றும் அரைப்பவுண் நிறையுடைய மூன்று மோதிரங்கள் களவாடப்பட்டுள்ளன.

குறித்த திருட்டு தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-6-60)

## வவுனியாவில் இருவருக்கிடையே மோதல்
# காதை கடித்து குதறிய இளைஞன்

(குருமன்காடு)

வவுனியா, வீரபுரம், சின்னத்தம்பனை பகுதியில் இரு தரப்பினருக்கு ஏற்பட்ட மோதலில் இளைஞன் ஒருவர் காதை கடித்து குதறியமையினால் படுகாயமடைந்த நபர் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் வீதியில் சென்ற சமயத்தில் குறித்த இரு தரப்பினருக்கு மிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் ஓர் இளைஞன் மோதலில் ஈடுபட்ட நபர் ஒருவரின் காதை கடித்து துண்டாக்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-250)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 83 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை வங்கி யாழ். மாவட்ட ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை ஸ்ரான்லி வீதியில் உள்ள இலங்கை வங்கிக் கிளையில் இடம்பெறவுள்ளது. (4-6)

## "யாழ்.முயற்சியாளர்-2022"
# விற்பனைக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றிற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் யாழ்.மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் நடத்தப்படும் "யாழ்.முயற்சியாளர்-2022" எனும் விற்பனைக் கண்காட்சி எதிர்வரும் 10, 11, 12 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் நல்லூர், முத்திரைச் சந்தி அருகாமையில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு உள்ளூர் உற்பத்தி பொருட்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்து பயன் பெறுமாறு யாழ்.மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அறிவித்துள்ளது. (4-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 220 | 240 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 500 | 450 |
| தக்காளி | 400 | 350 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 250 | 300 | 200 |
| கோவா | 140 | 320 | 400 | 350 |
| கரட் | 300 | 340 | 380 | 400 |
| பூசணி | 130 | 150 | 120 | 160 |
| புடோல் | 100 | 120 | 160 | 200 |
| வாழைக்காய் | 140 | 130 | 160 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 220 | 200 |
| பாகற்காய் | 300 | 250 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 120 | 320 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 | 300 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 360 |
| லீக்ஸ் | 280 | 240 | 260 | 300 |
| பீற்றூட் | 120 | 180 | 160 | 160 |
| கறிமிளகாய் | 600 | 300 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 450 | 450 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 160 | 250 |
| கீரை - 1 பிடி | 160 | 90 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 350 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 50 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 240 | 220 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 140 | 100 | 120 | 200 |
| பொன்னாங்கண்ணி | 80 | 90 | 50 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 160 | 100 | 100 | 150 |

## தவறவிடப்பட்ட தொலைபேசியை
## உரியவரிடம் ஒப்படைத்த பொலிஸ்



(குருமன்காடு)

வவுனியா தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் வவுனியா நகர பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான கையடக்க தொலை பேசியினை வீதியிலிருந்து கண்டெடுத்தார்.

அதன் பின்னர் அதில் இருந்த தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து உரிய நபரை, அடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் இது தொடர்பில் வவுனியா தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தகவலை வழங்கியுள்ளார்.

அதனையடுத்து உரியவர் பொலிஸ் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு குறித்த கையடக்க தொலைபேசியானது உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-6-250)

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய
மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 06.08.2022 சனிக்கிழமை தொடக்கம்
12.08.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன்
துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-4713)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல. 81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று நாட்...

கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமை களில் மட்டுமே பாடசாலைகள் நடைபெறும்.

வியாழக்கிழமை போயா தினமாகும். வெள்ளிக்கிழமை நிகழ்நிலை ஊடாக கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக் கப்படும் என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் வட மாகாண பாடசாலைகள் வரும் வாரம் தொடக்கம் ஐந்து நாட்கள் நடைபெறும் என வட மாகாண கல்வி அமைச்சு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மின்வெட்டு...

தப்படாது என்று இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம)

## QR பதிவுகளை...

அடுத்த 48 மணி நேரத்திற்கு மேற்கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் துறையின் திட்டமிட்ட பராமரிப்புப் பணிகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டர் பதிவு ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

எனினும் ஏற்கெனவே QR முறையில் பதிவுசெய்த பயனர்களுக்கு இதன் காரணமாக எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)


தன நிதானய
திகதி - 2022.08.05
சீட்டிழுப்பு இலக்கம் - 868
Z 28 40 58 76
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2022/08/05
சீட்டிழுப்பு இலக்கம் 4838
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
T 0 6 2 2 7 1
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.05
சீட்டிழுப்பு இலக்கம் 147
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 35 43 49 53 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1186
வெற்றி இலக்கங்கள்
R 18 01 05 11 60

கொவிசெத
திகதி 2022.08.05
சீட்டிழுப்பு இலக்கம் 3080
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
G 02 05 60 80
தேசிய லொத்தர் சபை


## தனியார் பஸ்களி...

ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட பணிப் புறக்கணிப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பணிப்புறக்கணிப்பை கைவிடுவதற்கு தமது சங்கமும் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

தனியார் பேருந்து சங்கங்கள் முன்னெடுத்துள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தினால், நாள் முழுவதும் பல பயணிகள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இன்று எரி...

நிலையங்களில் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் மிகுதி 17 எரிபொருள் நிரப்ப நிலையங்களில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளதன் காரணமாக இன்றைய தினம் பொதுமக் களுக்கான எரிபொருள் விநியோகம் இடம்பெறமாட்டாது. எனவே இன்றைய தினம் பொதுமக்கள் எரிபொருள் பெறுவதற்கு வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என யாழ்.மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள், மாகாண சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளடங்கலாக அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியர்களுக்கு சீரான முறையில் எரிபொருள் விநியோகிக்கப்பட வேண்டும் என்ற தொடர்ச்சியான கோரிக்கைக்கமைவாக இன்று சனிக்கிழமை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எரிபொருள் கிடைக்கப்பெறும் கீழ்க் குறிப்பிட்ட எரிபொருள் விற்பனை நிலையங்கள் தவிர எனைய எரிபொருள் விற்பனை நிலையங்களில் அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியர்கள் மோட்டார் சைக்கிள்களுக்கு மட்டும் எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தங்களுடனும் வைத்திய அதிகாரிகள் சங்கத்துடனும் கலந்துரையாடியதற்கமைவாக சுகாதார சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே இன்று சனிக்கிழமை கீழ்க்குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக எரிபொருள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதுடன் இவர்களுடன் இணைத்து தனியார்துறையில் கடமையாற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம)

## ஆர்ப்பாட்டக்...

போராட்டக்களத்தில் உள்ள அனைத்து இளைஞர், யுவதிகளையும் சகல வழிகளிலும் பங்கேற்கச் செய்ய தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் பல தரப்பினருக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனநாயக விரோத அரசியலையும் வன்முறையையும் தாம் எதிர்ப்பதாகவும் ஒடுக்குமுறைக்காகவே செயற்படுபவர்கள், பல்கலைக்கழக செயற்பாட்டின் ஊடாக பகிடிவதையை

நிறுத்தி சிறந்த சமூக ஜனநாயகத்துக்காக முன்வர வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வேலைநிறுத்தங்கள் மூலம் ஒரு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என்றும், பேச்சுவார்த்தை மூலம் மத்தியஸ்த நிலைக்கு வந்து கோரிக்கைகளை பெற்றுக் கொள்வதைப்போன்று, நாட்டுக்காக செய்ய வேண்டிய பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அவசரகால நிலையை முடிந்த வரை விரைவில் நீக்குவது நாட்டின் பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மைக்கு முக்கியமாக இருப்பதைப் போன்று, தற்போதுள்ள நிலைமைகள் காரணமாக நாட்டின் நிர்வாகத்திலும் அதன் தாக்கம் இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போது LGBT சமூகம் தொடர்பில் அவசரகாலச் சட்டம் காரணமாக பிரச்சினைக்குரிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை நீக்குவதற்கு தேவையான சட்டப் பின்னணியை தயார் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம)

## போராட்டம்...

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள் ராஜபக்ஷவின் அரசியல் வாழ்க்கையை முடிவுக்குகொண்டு வந்ததா? இல்லையெனில் அவர்களின் அரசியல் எதிர்காலம் என்னவாகும்? என்று நாமல் ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளிக்கும் முகமாக "எனது தந்தையாராகட்டும் அநுர குமார திஸாநாயக்கவாகட்டும் சஜித் பிரேமதாஸவாகட்டும் டலஸ் அழகப்பெருமவாகட்டும் நம் அனைவரின் அரசியல் பயணம் மக்களின் விருப்பத்திற்கேற்ப தீர்மானிக்கப்படுகிறது. அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் கிளர்ச்சியை நான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன். ஜனநாயக ரீதியிலான தேர்தலில் எம்மை வெற்றி பெறச்செய்யவோ அல்லது தோல்வியடையச் செய்யவோ மக்களுக்கு வாய்ப்பு உள்ளது. தனிப்பட்ட முறையில் போராட்டத்தை நடத்துவதில் எனக்கு எந்த அதிருப்தியும் இல்லை.

போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட சில ஆலோசனைகளும் யோசனைகளும் மிகவும் பெறுமதியானவை. போராட்டத்தில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லையென்றாலும், போராட்டக்காரர்கள் சிலருடன் எனக்கு பிரச்சினை இருக்கிறது.

செயற்பாட்டாளர்கள் எப்பொழுதும் ஜனநாயக விரோதக் கிளர்ச்சியுடன் அரசாங்கத்தைக் கவிழ்க்க முற்பட்டால், வன்முறையைப் பரப்ப முற்பட்டால், தேசியத் தொலைக்காட்சி அல்லது அரசு நிறுவனங்களுக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து, அந்த அரசாங்கச் சொத்துக்களைக் கைப்பற்றுவதே செயற்பாட்டாளரின் எண்ணமாக இருந்தால் அத்தகைய செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளை நாம் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

எனவே, ஜனநாயகத் தேர்தல் மூலம் தான் நம் அனைவரின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன்" என்றார். (ம)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1813 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.08.05 தினம் வெள்ளிக்கிழமை
R 11 16 48 64
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,966,100/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.05
சீட்டிழுப்பு இல : 3974
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 2,809,280/-
வெற்றி இலக்கங்கள்
47 61 69 75 O

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 205
சீட்டிழுப்பு திகதி 2022.08.05
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
02 29 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,608,420/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,260,963.40
திகதி 2022-08-05
வெற்றி வாரம் 3525
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் மிதுனம்
05 06 41 55
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 6,494,700/-

25
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 05 06 20 21 37
சீட்டிழுப்பு வாரம் 989
வர்ணம் இளஞ்சிவப்பு
திகதி 2022.08.05 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 251,822,725/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1639
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.08.05
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,635,080/-
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
29 38 55 64 D


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியம் உதவாவிட்டால்
# இலங்கையை மீட்க முடியாது
## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

**சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு வராமல் இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பது சாத்தியமில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரேரணை நல்லதோ, கெட்டதோ எவரேனும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அதனை அமுல்படுத்த வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அதனை எந்தவொரு தரப்பினரும் எதிர்த்தால் அதற்கு அவர்களின் முன்மொழிவுகள் எவை எனக் கேள்வி கேட்க அரசாங்கத்திற்கு உரிமை உண்டு என்றும் தெரிவித்தார்.

முதலில் நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இரண்டாவது மிக முக்கியமானது நிலையான கடன் ஒன்றைப் பெறுவது. இந்தக் கடனைப் பெறுவது தொடர்பில் எவருக்கேனும் ஆலோசனைகள் இருந்தால் அது இலகுவாக இருக்கும். உண்மையாக நாம் அந்த முன்மொழிவுகளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இந்த முன்மொழிவுகள் குறித்து பாராளுமன்றம் முடிவெடுக்க முடியும்.

அரசாங்கங்கள் மற்றும் அரச பொதுக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் நாம் எதிர்கொள்ள வேண்டிய ஒரு அடிப்படை பிரச்சினையாகும். அடுத்த 6 மாதங்களிலும். கண்டிப்பாக சிரமங்களை சந்திக்க நேரிடும். பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை சர்வதேச நாணய நிதியமும் ஒப்புக்கொள்கிறது.

நாடு முதலில் வெளிநாட்டுக் கடன் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். மேலும் ஆசிய பிராந்தியத்தின் புவிசார் அரசியலில் சிக்கிக் கொள்ளாமல் பயணிக்க வேண்டும்.

நாம் அதிகளவிலான கடன்தொகையை மீள செலுத்த வேண்டியுள்ளது. ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை, அணுசக்தி பயன்பாடு ஆகிய துறைகள் தொடர்பில் சம்பிரதாய கட்டமைப்பிற்கு வெளியே சிந்திக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தாமல் நாட்டின் எதிர்காலத்தை சீரமைக்க முடியாது என்றார். (ம)


**Sb Travels & Tours Pvt Ltd**

சகல விதமான விமான பயணச்சீட்டுகளிற்கான நேரடி முகவராக IATA Agent ஆக செயற்படும் SB Travels and Pvt Ltd சகல நாடுகளிற்கான விமான பயணச்சீட்டுகள், Travels Itinerary, Travel Insurance, Dubai, Malasiya, India, Bangkok விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஐரோப்பிய நாடுகளிற்கான விசா விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து தரப்படும் மற்றும் விமானப் பயணத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து தருகிறது.

தற்போது Colombo to Chennai 65,900/= மட்டுமே (நிபந்தனைக்கு உட்பட்டது)

தொடர்புகளிற்கு:
Sb Travels & Tours Pvt Ltd
No.198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 8555/ 021 222 9555
Mobile Number : 076 691 1082, 076 691 1083
Email : sbTravelsjaffna@gmail.com
Sb Travels Colombo head office
No- 0112 540 280, 0771 083 481, 0112 333 322
(C-4710)

**விற்பனைக்கு**

L.G குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (12324)
077 110 9408

**ராஜ் சொத்து விற்பனை நிலையம்**
வைமன் றோட், பாரதி சிலை முன்பாக நல்லூர், யாழ்ப்பாணம்.

**வீடுகள், காணிகள் விற்பனைக்குண்டு**

1. சாவகச்சேரி தச்சன்தோப்பு 130 பரப்பு
2. நாவற்குழி A9 Road 40 நிலப்பரப்பு
3. மிருசுவில் 68 பரப்பு A9 வீதி 400 m
4. சாவகச்சேரி 55 பரப்பு 1000 சதுர அடி கட்டடத்துடன்
5. சிறுப்பிட்டி பெரியவீட்டுடன் 10 பரப்பு வெட்டுக்கிணற்றுடன்
6. இயக்கச்சி 40 ஏக்கர் தென்னந்தோட்டம்
7. இயக்கச்சி 39 ஏக்கர் தென்னந்தோட்டம் 9 குழாய்க் கிணறு
8. கச்சேரி நல்லூர் வீதி 4 பரப்பு 2 வீட்டுடன்
9. மாவிட்டபுரம் கூச்சியவத்தை 6 பரப்புக் காணி
10. அளவெட்டி நகுலேஸ்வரம் வீதி 216 பரப்பு 13½ ஏக்கர்
11. மருதனார்மடம் அம்பலவாணர் வீதி 3 பரப்பு 2 குழி பண்ணை வீட்டுடன் சுற்றுமதில், வெட்டுக்கிணறு.
12. ஆடியபாதம் வீதி 2¾ பரப்புக் காணி.
13. வவுனியாவில் மூன்றுமுறிப்பு சந்தியில் 6 ஏக்கர்
14. கிளிநொச்சியில் கரடிப்போக்கு சந்தியிலிருந்து 4 மாடி கட்டடம் 16 Rooms AC, 6 கடை ½ ஏக்கர் காணியுடன்.

**காணி விற்பனைக்கு உண்டு**

1. கொழும்பு 6இல் விவேகானந்த வீதி, 8½ பேச் 3 மாடி 10 Room 2 கார் தரிப்பிடம்
2. எட்விட் வீதி 10½ பேச் 6 படுக்கை அறை AC, 3 கார் தரிப்பிடம் சோலர் நிர்மாணிக்கப்பட்டது.
3. சோபிற் (கொள்பிட்டி) 8 பேச் காணி இடப்பட்ட வீடு 8 அறைகள் கார் தரிப்பிடம் 1
4. அப்துல் கபீர் மாவத்தை 55 பேச் காணி

**குருணாகல**

1. 100 ஏக்கர் சகல வசதியுடன் காணி 70, 000 தேங்காய் பிடுங்கலாம்.

**புத்தளம்**

1. பிங்கிய 15 ஏக்கர் 20,000 தேங்காய்
2. பள்ளம் 10 ஏக்கர் 8000 தேங்காய்

**யாழ்ப்பாணம்**

1 முனீஸ்வரன் வீதியில் கடை விற்பனைக்கு உண்டு. (யாழ்ப்பாணம்)

காலை 7 மணி - பிற்பகல் 6 மணி

ராஜ் சொத்து விற்பனை நிலையம்
வைமன் றோட் பாரதி சிலை முன்பாக நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே:- 077 603 3259
(C-4712)

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

EXECUTIVE OFFICER



✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-4659)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
(C-4659)

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

**காணி விற்பனைக்கு**

யாழ். நாவற்குழி சந்தியில் 57 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(12311)
076 490 5403, 076 491 2493, 076 490 6029

**நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு**

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த்தொட்டி, வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதச் சான்றிதழுடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

மேலும் மாபிள் பதிக்கப்பட்ட குளியல் அறைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை மாபிளை உடைத்து சேதப்படுத்தாமல் சிறந்த இரசாயனங்கள் மூலம் நீர்க்கசிவினை நிறுத்தித் தருகிறோம்.

Skyline Water Proofing

1 சதுர அடி ரூ.200/- முதல்

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743
(12365)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.